# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்



மலர் - 17
இதழ் - 5
மே 2004

வெளியிடுவோர்


**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701. தமிழ்நாடு. இந்தியா

✆ 04257 - 230030, 230382, Cell : 98427 - 30382

E-mail : kangayamocfc@eth.net

# BIBLE MEDITATION





## ஆசானின் அறிவுரையில்...


1. ஆசிரியர் உரை........................................ 1

2. கிறிஸ்துவின் இரத்தத்தில் வல்லமை ஏன் இருக்கிறது........................ 10

3. பெண்கள் பகுதி........................................ 13

4. வாலிபர் பகுதி........................................ 17

5. சிறுவர் பகுதி........................................ 20

6. யாக்கோபு ஒரு கண்ணோட்டம்........................ 22

7. விசுவாசத்தின் அடிப்படைகள்........................ 23

8. மகிழ்ச்சி........................................ 28

9. நாம் நடந்து வந்த பாதைகள்........................ 31

# THIRUMARAI AASAAN

*Published by Church of Christ*

**S. Rajanayagam** *Editor*

**J.C. Choate** *Honorary Editor*

Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 17 MAY - 2004 Issue - 5


## ஆசிரியர் உரை

# பரம தேசத்தையே விரும்பினார்கள்

விருப்பம் என்பது எல்லா மனிதர்களுக்குள்ளும் இருக்கின்ற ஒரு பொதுவான குணம். நான் எதையும் எப்பொழுதும் விரும்பினதில்லையென்றோ அல்லது விரும்புவதில்லையென்றோ ஒருவன் சொன்னால் அதை நாம் எந்தத் தயக்கமும் இல்லாமல் அப்படியே ஒதுக்கி விடலாம். எப்படியெனில் விருப்பு, வெறுப்பைக் கடந்தவர்களாக யாருமே இப்பூமியில் இல்லை. ஒருவேளை, விருப்பமானது வயதுக்கேற்ற படியும், தரத்திற்குத் தகுந்தபடியும், சூழ்நிலைக்கு உகந்தபடியும் கொஞ்சம் முன்பின் இருக்கலாமேயொழிய சுத்தமாக இல்லையென்ற நிலை யாருக்குள்ளும் இல்லை. இவ்வுலகை மையமாக வைத்து வாழ்பவர்களுக்குள்ளும் விருப்பம் உண்டு, அவ்வுலகை மையமாக வைத்து வாழ்பவர்களுக்குள்ளும் விருப்பம் உண்டு. ஆனால் அந்த இரண்டு விருப்பங்களுக்குமிடையே ஒரு பெரிய இடைவெளி இருக்கும். அவ்வளவு தான்.

சரி நம்முடைய குடியிருப்பு பரலோகம் (பிலி 3:20) என்று சொல்லும் பவுலடியாருக்குள்ளும் விருப்பம் இருந்தது. ஆம், பிலிப்பியர் 1:23-ல் "... தேகத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு ஆசையுண்டு. அது அதிக நன்மையாக இருக்கும்" என்கிறார். இன்னும் இதே பவுல், கொரிந்தியருக்குச் சொல்லும்போது, ".... இந்த தேகத்தை விட்டுக் குடிபோகவும், கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்."

(II கொரி 5:8) என்கிறார். இந்த தேவ மனிதன் ஏன் இப்படி விரும்பியிருக்கிறான் என்பதற்கு, தாவீது ராஜா, ஆவியானவரின் துணை கொண்டு கொடுக்கும் விளக்கத்தை கவனியுங்கள். "உம்முடைய சமூகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலது பாரிசத்தில் நித்தியப் பேரின்பமும் உண்டு" என்று (சங் 19:11).

தாவீதால் உரைக்கப்பட்டிருக்கும் இந்த மாபெரும் உண்மையை பழைய ஏற்பாட்டுப் பக்தர்கள் மிகச் சிறப்பாக அறிந்து வைத்திருந்துள்ளனர். ஆகவே தான், எபிரெய ஆசிரியர் பரிசுத்த ஆவியானவரின் துணையோடு அவர்களைப் பற்றிய பட்டியலை 11-ம் அதிகாரத்தில் கொடுக்கும்போது, அவர்கள் எதை விரும்பினார்கள் என்றும், எதன்மேல் நோக்கமாயிருந்தார்கள் என்றும் எடுத்துக்கூறுகிறார். "**அதையல்ல அதிலும் மேன்மையான பரம தேசத்தையே விரும்பினார்கள் .....**" என்றும் (11:16) "**இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்தான்**" (11:26) என்றும் சொல்லப்பட்டருக்கிறது.

விசுவாசிகளின் பட்டியலை உள்ளடக்கியிருக்கிற எபிரெயர் 11-ம் அதிகாரத்தை நாம் கவனித்தால் அதில் 16 பேர், பெயர் குறிப்பிட்டு சொல்லப்பட்டிருக்கிறார்கள். ஆம், ஆபேல் தொடங்கி, சாமுவேல் மட்டும் பேசப்பட்டிருக்கிறார்கள். அந்தப்பட்டியலைக் கொடுத்த ஆவியானவர் பட்டியலின் ஊடே இரண்டு இடங்களில் நிறுத்தி, சம்மந்தப்பட்டவர்கள் பற்றிக் கொஞ்சம் கூடுதலான விளக்கம் கொடுக்கிறார். முதல் இடம், ஆபிரகாமைப் பற்றிச் சொல்லப்படும் சந்தர்ப்பம். இரண்டாவது இடம், மோசேயைப் பற்றிப் பேசப்பட்டிருக்கும் இடம். இப்பொழுது 16 பேருக்கும் அதிகமான நபர்களைக் கொண்ட பட்டியலில் இந்த இரண்டு பேரைப் பற்றிச் சொல்லுமிடங்களில் மாத்திரம் ஏன் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது என்ற கேள்வி இயல்பாகவே நமக்குள் எழுகிறது. இதுபற்றி புரிந்து கொள்வதற்கு இந்நிருபத்தின் பின்னணியைக் கொஞ்சம் தெரிந்து கொள்வது அவசியம்.

எபிரெயர் நிருபமானது, யூதமார்க்கத்திலிருந்து கிறிஸ்தவத்திற்கு வந்து, பிறகு, தங்கள் இனத்தாரின் துன்புறுத்துதல்களுக்குப் பயந்து, திரும்பவும் யூதமார்க்கத்திற்குப் போய்க்கொண்டிருந்த அல்லது போக எண்ணங்கொண்டிருந்தவர்களுக்காக எழுதப்பட்ட நூல். ஆம், யூத கிறிஸ்தவர்களே, நீங்கள் திரும்பிப் போவது தவறு, திரும்பிப் போக வேண்டாம், மாறாக, நாமெல்லாரும் செத்த கிரியைகளுக்கு நீங்கலாகி பூரணராகும்படி கடந்து போவோம் வாருங்கள் என்று அறைகூவல் விடுக்கிறார். (6:1,2) அது மாத்திரமல்ல, நீங்கள் திரும்பிப்போக நினைக்கும் யூத மார்க்கத்தை காட்டிலும், கிறிஸ்துவின் மார்க்கம் **மேலானது** என்று

எடுத்துரைப்பதே இந்நூலின் பிரதான நோக்கமாகவும் உள்ளது. ஆகவேதான் கிறிஸ்துவும், கிறிஸ்தவமும் எந்தெந்த வகைகளில் மேலானது என்று இந்நூலில் அடுக்கடுக்காக விவாதிக்கப்பட்டு, அதற்கான காரணங்கள் அழகாக எடுத்தியம்பபட்டிருக்கிறது.

பொதுவாக, யூதர்களுக்கு, தங்களது முன்னோர்களைப்பற்றிய பெருமையும், தங்களுடைய சரித்திரத்தைப் பற்றிய மேன்மையும் எப்போதும் உண்டு. தங்களை மேன்மையாக நினைக்கச் செய்யும் அக்காரியங்களைப் பற்றித் தெரிந்து கொள்வதில் எப்பொழுதும் அதிக ஆர்வம் காட்டுவர். முற்பிதாக்கள் மற்றும் மோசே போன்றவர்களைப்பற்றி மிக உயரிய மரியாதை இவர்களுக்கு உண்டு. ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்பதில் இவர்கள் அலாதி இன்பம் அடைவர். (மத். 3:9, லூக். 3:8, யோவா. 8:39).

முற்பிதாக்களில் முதலாமவராகிய ஆபிரகாம் மீதும், பிரமாணங்களின் தந்தையாகிய மோசே மீதும், இவர்களுக்கிருந்த மரியாதை ஆவியானவருக்குத் தெரியாததல்ல. இந்த யதார்த்தத்தை அடிப்படையாக வைத்து, அவர்களுக்குச் சொல்ல வேண்டியதைச் சொல்லும்படியாகவே விசுவாச வீரர்களின் பட்டியலில், இவர்களிருவரைப் பற்றிப் பேசும் போது, கூடுதல் விளக்கம் தரப்பட்டுள்ளது. அதன் நோக்கம், உங்கள் ஆபிரகாமும், உங்கள் மோசேயுமே பரம தேசத்தை விரும்பி, இனிவரும் பலன் மேல் நோக்கமாயிருந்திருக்கும் போது, நீங்கள் அதைப்பற்றிக் கவலைப்படாமல், "திரும்பிப் போகப் பார்க்கிறீர்களே" இது எப்படி நியாயமாகும் என்று கேள்வி எழுப்பி, தவறை இடித்து காட்டுகிறார். ஆகவே தான் அந்த இரண்டு இடங்களிலும் கூடுதல் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. எப்படி?

சரி, நமக்கு இம்மாதம் தேவைப்படுவது, ஆபிரகாம் பற்றிச் சொல்லப்பட்டிருக்கும் இடத்திலுள்ள **முதல் விளக்கப்பகுதி.** ஆபிரகாம் மற்றும் சாராள் பற்றி சொல்லப்படுவதற்கு முன்பாகவே விசுவாசத்தினாலே நீதிமான் என்று சாட்சி பெற்ற ஆபேல் பற்றியும் (11:4) விசுவாசத்தினாலே; தேவனுக்குப் பிரியமானவன் என்று பெயரெடுத்த ஏனோக்கு பற்றியும் (11:5) விசுவாத்தினாலுண்டாகும் நீதிக்கு சுதந்தரவாளியான நோவா பற்றியும் (11:7) பேசப்பட்டிருக்கிறது, இம்மாமனிதர்களோடு ஆபிரகாமும், சாராளும் பேசப்பட்டு அதன் பிறகு தான் இவ்விதம்எழுதப்பட்டுள்ளது. "இவர்களெல்லாரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக் கொண்டு பூமியின் மேல் தங்களை அந்நியரும்,

பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு விசுவாசத்தோடே மரித்தார்கள். இப்படி அறிக்கையிடுகிறவர்கள் சுயதேசத்தை நாடிப்போகிறோம் என்று தெரியப்படுத்துகிறார்கள். தாங்கள் விட்டு வந்த தேசத்தை நினைத்தார்களானால், அதற்குத் திரும்பிப் போவதற்கு அவர்களுக்குச் சமயம் கிடைத்திருக்குமே. அதையல்ல, அதிலும் மேன்மையான **பரம தேசத்தையே** விரும்பினார்கள்; ஆகையால் தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுகிறதில்லை, அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம் பண்ணினாரே" (11:13 - 16) என்று.

இவ்வசனப்பகுதியை நாம் கவனித்தால், **அவர்களுடைய தேவனென்னப்பட அவர் வெட்கப்பட வில்லையென்று சொல்லப்பட்டிருக்கிறது**, ஆம் பரலோகத்தின் தேவன் தன்னை ஆபிரகாமின் தேவன், ஈசாக்கின் தேவன், யாக்கோபின் தேவன் என்று பல இடங்களில் வெளிப்படுத்தியிருக்கிறார். (யாத் 3:6) 16-ம் வசனத்தை கூர்ந்து கவனித்தால், தேவன் ஏன் அவர்கள் தேவனென்னப்படுவதற்கு வெட்கப்படவில்லையென்பதற்கான காரணம் பளிச்சென சொல்லப் பட்டிருக்கிறது. அது, அவர்கள் **மேன்மையான பரம தேசத்தையே விரும்பினார்கள்** என்பது. நாமும் கூட நம்முடைய வாழ்க்கையில் பரம தேசத்தை விரும்புபவர்களாக இருந்தால், தேவன் நம்முடைய தேவனாக இருப்பதோடு. நம்முடைய தேவனென்னப்படுவதற்கு அவர் வெட்கப்படவுமாட்டார். அப்படியானால், பரம தேசத்திற்கான வாழ்க்கை வாழ நாம் ஒவ்வொருவரும் தயாரா? சொல்லுங்கள்.

எபி 11:13-16 வசனப்பகுதியில் பரமதேசத்தை விரும்பிய அவர்கள் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்திருக்கிறார்கள் என்பதைக் கண்டால், நாமும் நம்மை பரம தேசத்திற்கு ஆயத்தப்படுத்திக் கொள்ள வாய்ப்பிருப்பதால் அவைகள் என்னவென்று இப்பொழுது பார்ப்போம்.

## I-வாக்குதத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல் ......

பரமதேசத்தை விரும்பிய அம்மாமனிதர்களிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளும் முதல் பாடம், "அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு நம்பி அணைத்துக் கொண்டார்கள்" என்பது.

ஆபிரகாம் போன்றவர்கள் சரீர வாக்குத்தத்தத்தை அடைந்தார்களா இல்லையா எனப்பார்த்தால், ஒருவகையில் அடைந்தார்கள் என்றும் சொல்லலாம், இல்லையென்றும் சொல்லலாம். எப்படியெனில் "உன் மனைவியாகிய சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான்" (ஆதி 18:10) என்ற வாக்குதத்தத்தை அவன் அடைந்தான். ஆனால் அதே நேரத்தில்

பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் (ஆதி 12:3) உன் சந்ததியை பூமியின் தூளைப்போலப்பெருகப்பண்ணுவேன் (ஆதி 12:7) என்பன போன்ற வாக்குத்தத்தங்களை அவன் அடையவில்லை.

ஆனால், இப்பகுதியை நாம் கூர்ந்து பார்த்தால், இங்கு சொல்லப்படும் வாக்குத்தத்தங்கள் அடைந்தும் அடையாமலுமிருக்கிற சரீரப்பிரகாரமான வாக்குத்தத்தங்களாக இல்லாமல், **ஆவிக்குரிய வாக்குத்தத்தங்களாகவே தெரிகிறது.** எப்படியெனில் எபி 11:10-ம் வசனம், ஆபிரகாம் "அஸ்திபாரங்களுள்ள நகரத்திற்குக் காத்திருந்தான்" என்று கூறுகிறது. கூடார வாசியான அவன் அஸ்திபாரங்களுள்ள நகரத்திற்குக் காத்திருந்தான் எனில், அந்த அஸ்திபாரங்களுள்ள நகரத்தைப் பற்றிய காரியங்கள் ஏதோ ஒருவகையில் அவனுக்கு வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது என்றே நமக்குத் திட்டமாய்த் தெரிகிறது. நமக்கு கிடைத்திருக்கும் பழைய ஏற்பாட்டில் அவைகளை நாம் காண முடியாவிட்டாலும், அவர்கள் புரிந்து கொள்ளும்படியான அளவில் அது வெளிப்படுத்தப்பட்டிருக்கவே வேண்டும்.

ஆகவே தான், அவர்களால் தூரத்திலே அவைகளைக் கண்டு நம்பி அணைத்துக் கொள்ள முடிந்திருக்கிறது. தூரத்திலே என்றால் எவ்வளவு தூரத்திலே அவைகளைக் கண்டு நம்பினார்கள்? நம்பி அதை அணைத்துக் கொண்டார்கள்? இதை விளங்கிக்கொள்வதற்கு தயவு செய்து தொடருங்கள். தாவீது அரசன் தேவனுக்கு ஆலயம் கட்ட விரும்பின போது, தேவன் நாத்தானைக் கொண்டு இவ்விதம் சொன்னார். "உன் வீடும் உன் ராஜ்யமும் என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும் என்கிறார் என்று" (II சாமு7:16) அதற்கு தாவீது, "கர்த்தராகிய ஆண்டவரே இது இன்னும் உம்முடைய பார்வைக்குக் கொஞ்சம் காரியமாயிருக்கிறது என்று கர்த்தராகிய ஆண்டவராயிருக்கிற தேவரீர் அடியானுடைய வீட்டைக் குறித்து, **வெகுதூரமாயிருக்கும்** காலத்துச் செய்தியை மனுஷர் முறைமையாய்ச் சொன்னீரே என்றான். (7:19)

அதாவது, சுமார் ஓர் ஆயிரம் ஆண்டுகளில் இயேசுவைக் கொண்டு நிறைவேறப் போகும் செய்தியை "வெகு தூரத்துச் செய்தி" என்று கூறுகிறான். பழைய ஏற்பாட்டில் ஏராளமான தீர்க்கதரிசனங்கள் இயேசுவைப்பற்றியும் அவர் மூலமாக நடைபெறப்போகும் காரியங்கள் பற்றியும் விபரமாக விளங்கும்படி சொல்லப்பட்டிருக்கிறது. விபரமாகச் சொல்லப்பட்டு ஓர் ஆயிரம் ஆண்டு கழித்து நிறைவேறுபவைகளையே *வெகுதூரத்துச் செய்தி*என்று சொல்லப்பட்டிருக்கும் போது, ஆபேல், ஏனோக்கு, நோவா, ஆபிரகாம் போன்றவர்களுக்கு விபரமாக வெளிப்படுத்தப்படாத பரம

**தேசமாகிய பரலோகம்** என்பது "எவ்வளவு தூரத்துச்" செய்தியாக இருந்திருக்குமென்று அப்படியே கொஞ்சம் எண்ணிப்பாருங்கள். அது எவ்வளவு தூரத்துச் செய்தியாக இருந்தாலும் அதை நம்பி, அணைத்துக் கொண்டுபரமதேசத்தை விரும்பி எப்படி வாழ்ந்திருக்கிறார்கள் என்றும் பாருங்கள் நாமும் தான் இருக்கிறோம் ..?!

அருமையானவர்களே! நமக்கு பரமதேசமாகிய பரலோகம் எப்படி வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது? தூரத்துச் செய்தியாகவா? அல்லது வெகுதூரத்துச் செய்தியாகவா? இரண்டுமேயில்லை அது, நாம் எட்டிப்பிடிக்கும் தூரத்துச் செய்தியாகத்தான் நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. இயேசுவானவர் "நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன்" என்றார். (யோவா 14:3) எப்பொழுது வருவேன் என்று சொல்லிச் சென்றிருக்கிறார்?, "இதோ! சீக்கிரம் வருகிறேன்" என்று சொல்லிச் சென்றுள்ளார்.

இப்பொழுது சொல்லுங்கள், பரலோகம் என்பது நமக்கு தூரத்துச் செய்தியா? பக்கத்துச் செய்தியா? சீக்கிரம் என்பது தூரமா? பக்கமா? நிச்சயமாகவே பக்கம்தான். அப்படியானால், தூரத்திலே கண்டவர்களே, நம்பி அணைத்துக் கொண்டு, பரமதேசத்தை விரும்பி காத்திருந்திருக்கிறார்களென்றால், நாம் எவ்வளவு தூரம் பரலோகத்தை நம்பி அதற்காகக் காத்திருக்க வேண்டுமென்று எண்ணிப்பாருங்கள் உண்மையாகவே, நாம் பரலோகத்தை நம்பி, காத்திருக்கிறவர்களாக உள்ளோமா? உங்கள் பதில் இல்லையென்பதானால், இது முதலாகிலும், நாம் பரம தேசத்தை நம்பி அணைத்து, அதற்காகக் காத்திருக்கிறவர்களாக இருப்போம்.

## II-அந்நியரும், பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு ..

பரம தேசத்தை விரும்பிய அத்தேவ மனிதர்களிடமிருந்து நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற இரண்டாவது பாடம், "பூமியின் மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு விசுவாசத்தோடே மரித்தார்கள்" என்பது.

பரமதேசமாகிய பரலோகத்தை நாடுகிறவர்களுக்குள்ளாக இருக்க வேண்டிய மிக முக்கியமான குணங்களில் ஒன்று, "இந்த பூமி சதம் அல்ல" என ஏற்றுக்கொள்வது. யாரெல்லாம் இந்த உண்மையை ஏற்றுக்கொள்கிறார்களோ அவர்களால் தான் பரலோகத்திற்காக வாழ முடியும். பரலோகத்திற்காக காத்திருக்க முடியும், விசுவாச வீரர்களின்

பட்டியலில் வரும் அநேகர் இந்த உண்மையை உணர்ந்தவர்களாகவே வாழ்ந்துள்ளனர். செல்வச்சீமானாக வாழ்ந்த ஆபிரகாம் ஏத்தின் புத்திரரிடத்தில் "நான் அந்நியனும், பரதேசியுமாய் இருக்கிறேன்". (ஆதி 23:4) என்று சொல்லியுள்ளார். இன்னும் எகிப்துக்குச் சென்ற யாக்கோபு பார்வோனிடத்தில் "நான் பரதேசியாய் சஞ்சரித்த நாட்கள் 130 வருஷம் என்றான்" (ஆதி 47:9) மேலும் தாவீது சங் 39:12-ல் "அந்நியனும், பரதேசியுமாய் இருக்கிறேன்" என்கிறான். இந்த எண்ணம் இவர்களது அடிமனதில் ஆழமாக இருந்தபடியால்தான் நிலையான நகரத்திற்குக் காத்திருக்க முடிந்தது.

இக்கருத்தை பரிசுத்த ஆவியானவர், புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களைக் கொண்டும் வலியுறுத்தியிருக்கிறார். "பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும் தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம். ஏனெனில் இந்தக் கூடாரத்திலே தவித்து, நம்முடைய பரம வாசஸ்தலத்தைத் தரித்துக் கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர்களாயிருக்கிறோம்." (IIகொரி 5:1,2) இன்னும் "நம்முடைய குடியிருப்பு பரலோகம்" என்று பிலிப்பி பட்டணத்து சபையாருக்கு எழுதும் போதும் சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய எபிரெய ஆசிரியரே கூட, "நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை வரப்போகிறதையே தேடுகிறோம்" என்று கூறியுள்ளார் (எபி13:14)

இந்த பரமபக்தர்கள் செய்த இன்னொரு முக்கிய காரியம் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டதோடு நிற்காமல், விசுவாசத்தோடே மரித்திருக்கிறார்கள். அதாவது, கடைசி மூச்சு வரை தங்களுடைய நம்பிக்கைக்காக, தங்களது எதிர்பார்ப்புக்காக வாழ்ந்திருக்கிறார்கள். எவ்வளவு பெரிய விசுவாசம் பாருங்கள்! மெய்க் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு இப்படிப்பட்ட விவாசம் மிக மிக முக்கியம். நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவால் "முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்" (மத் 10:22) என்றுரைக்கப்பட்ட வார்த்தைகளின் பொருள், அவர் வருவதற்கு சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக வாழ்ந்த இவர்களுக்கு நன்றாகவே விளங்கியிருக்கிறது.

அன்பானவர்களே ! இப்படிப்பட்ட உண்மைகளை அறிந்தவர்களாக இன்றைக்கு நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தை நடத்திக் கொண்டுள்ளோமா? சிந்தித்துப் பார்ப்போம். நாமும், பரம தேசத்துக்குப் பங்குள்ளவர்களாக மாற வேண்டுமானால், இந்த பூமியின் வாழ்க்கை எப்படிப்பட்டதென்பதைப் பூரணமாக உணர்ந்து கொள்ளவேண்டும். நாமும் விசுவாசத்தோடே

மரிக்கத்தக்கதொரு விசுவாச வாழ்க்கை வாழ வேண்டும். அந்த விசுவாச வாழ்க்கை கிரியைகளுடன் கூடியதாக இருக்க வேண்டும். ஏனெனில் கிரியையில்லாத விசுவாசம் செத்தது (யாக் 2:17) ஆம் விசுவாசிக்கிற ஒருவன் தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கிறவனாக இருப்பான். (யோவா 6:28:2,9)

ஆகவே, நம்முடைய வாழ்க்கையிலே தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பித்து, இந்த பூமியிலே நாம் அந்நியரும், பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு விசுவாசத்தோடே மரிக்கத்தக்கதானதொரு வாழ்க்கையை நடத்துவோமாக!

## III-தாங்கள் விட்டு வந்த தேசத்தை நினைக்கவில்லை

பரம தேசத்தை விரும்பிய இம்மாமனிதர்களிடமிருந்து நமக்கு கிடைக்கிற மற்றுமொரு பாடம், "தாங்கள் விட்டு வந்த தேசத்தை நினைக்காமல்" வாழ்ந்தார்கள் என்பது.

இன்றைக்கு விசுவாச வாழ்க்கையில் அநேகர் விழுந்து போவதற்குக் காரணமே, தாங்கள் விட்டு வந்ததை நினைப்பது தான். பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும் போது, "தேமா இப்பிரபஞ்சத்தின் மீது ஆசை வைத்து ....."(II தீமோ 4:10) பிரிந்து போனான் என்கிறார். பிரபஞ்சம் என்றால் உலகம். உலகத்தையும், உலகத்திலுள்ளவைகளையும் விட்டுப் பிரிந்து வந்தவன் மீண்டும் திரும்பிப் பார்த்தால் அவர்கள் நிலை கேடுள்ளதாக மாறிவிடும் அபாயம் உண்டு. (IIபேது. 2:20) எகிப்திலிருந்து விடுதலையான இஸ்ரவேல் ஜனங்கள், கானானுக்குள் பிரவேசிக்க முடியாமல் விழுந்து போனதற்கு என்ன காரணம்? தாங்கள் விட்டு வந்தவைகளை சதா நினைத்தது தான்."நாம் எகிப்திலே கிரயமில்லாமல் சாப்பிட்ட மச்சங்களையும், வெள்ளரிக்காய்களையும், கொம்மட்டிக்காய்களையும், கீரைகளையும், வெண்காயங்களையும், வெள்ளைப்பூண்டுகளையும் நினைக்கிறோம். இப்பொழுது நம்முடைய உள்ளம் வாடிப்போகிறது. இந்த மன்னாவைத் தவிர நம்முடைய கண்களுக்கு முன்பாக வேறொன்றும் இல்லையே என்று சொன்னார்கள். (என். 11:5,6) இச்செயல் கர்த்தருக்கு மிகுந்த கோபத்தை உண்டாக்கினது (11:10) ஆம் அவராலே அழைக்கப்பட்டவர்கள் திரும்பிப் பார்ப்பதை தேவன் ஒரு போதும் விரும்புவதில்லை.

அதுமாத்திரமா நம்மெல்லாருக்கும் நன்கு தெரிந்த லோத்தின் மனைவி எப்படி? "மலைக்கு ஓடிப்போ" என்ற தேவன் வார்த்தைக்குச் செவி கொடாமல் அந்த ஊருக்குப் போகிறேன் என்று கேட்டு அதையும் தேவன் சொல்லியபடி செய்யாமல், திரும்பிப் பார்த்து "உப்புத்தூண் ஆனாள்" (ஆதி

19:26) விட்டு வந்ததைத் திரும்பிப் பார்த்ததால் வந்த வினை அவளை மட்டும் பாதிக்காமல், அவளுடைய பிள்ளைகள் இரண்டு பேருக்கும் சாபமாகவும் மாறியது (ஆதி 19:33-36) விட்டு வந்ததைத் திரும்பப் பார்ப்பதின் பயங்கரம் உங்களுக்கு விளங்குகிறதா இல்லையா?

ஆனால், இந்த ஆபிரகாமோடு சேர்ந்த அந்த ஆதிப் பிதாக்கள் தாங்கள் விட்டு வந்த காரியத்தில், மிகவும் கவனமாகவும், எச்சரிப்பாகவும் இருந்தார்கள். ஆம், தன் மகன் ஈசாக்குக்குப் பெண் பார்த்த போது, தன் வேலைக்காரனிடம் என்ன சொல்லுகிறான் பாருங்கள். "அதற்கு ஆபிரகாம், நீ என் குமாரனை "மறுபடியும் அங்கே அழைத்துப் போகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு" (ஆதி 24:6) என்றான். கர்த்தர் என் மகனுக்குப் பெண்ணைக் கொடுப்பார். அப்படி கொடாவிட்டாலும் என் மகனை மாத்திரம் நான் விட்டு வந்த தேசத்துக்கு அழைத்துக் கொண்டு போக வேண்டாம் என்று உறுதிபடக் கூறினான். இப்படிப்பட்ட உறுதிதான் ஒவ்வொரு கிறிஸ்தவனிடமும் இருக்க வேண்டுமென்று இயேசுவானவர் போதித்துள்ளார். இவ்வசனத்தைக் கவனியுங்கள் "அதற்கு இயேசு கலப்பையின் மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியானவன் அல்ல என்றார்" (லூக் 9:62) பின்னிட்டுப் பார்ப்பதை வேதாகமம் எப்பொழுதும் எதிர்த்தே வந்திருக்கிறது.

அன்பான தேவப் பிள்ளையே, நாம் மேலே பார்த்த காரியங்களில் நாம் ஒவ்வொருவரும் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம்? நாம் பாவத்திற்கு மரித்து கிறிஸ்துவுடனே கூட எழுந்தது உண்மையானால் பூமியிலுள்ளவைகளைத் தேடாமல் மேலானவைகளைத் தேடுகிறவர்களாகவே இருக்க வேண்டும். (கொலோ 3:1,2)

ஆனால், நாம் அப்படி இருக்கிறோமா? பரமதேசமாகிய பரலோகம் நமக்குச் சொந்தமாகவேண்டுமென்று விரும்புகிற நாம், அந்த ஆதி பக்தர்களைப் போல, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை நம்பி அணைத்துக் கொண்டு, இப்பூமியில் அந்நியரும், பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விட்டு வந்த பாவமான காரியங்களை ஒரு போதும் நினையாமல் முடிவு பரியந்தம் விசுவாசத்தில் உறுதியாயிருப்போமாக!

ஆமென்.

**E.Z.S. ராஜநாயகம்**

# கிறிஸ்துவின் இரத்தத்தில் வல்லமை ஏன் இருக்கிறது?

கிறிஸ்துவின் இரத்தத்தைப் பற்றி பவுல் எபேசு சபை கிறிஸ்தவர்களுக்கு எழுதுகையில், "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின் படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. (எ.பே 1:7) கொலேசே பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு அவர் எழுதுகையில்," (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது." (கொலோ 1:14) கிறிஸ்து கர்த்தருடைய பந்தியை ஆரம்பித்து வைக்கையில் "இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது." (மத் 26:28) என்றார். கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக் இரட்சிக்கப்படுகிறவர்கள், கர்த்தருடைய சபையில் சேர்த்துக் கொள்ளப் பட்டார்கள் (அப் 2:47). பவுல், எபேசு சபை மூப்பர்களிடத்தில் பேசும் போது ஆகையால், உங்களைக் குறித்தும், தேவன் தன்னுடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள் என்றார் (அப் 20:28) எபேசியர் 5:25-ல், கிறிஸ்து சரீரத்திற்காக அல்லது சபைக்காக மரித்தார், அதாவது தன் இரத்தத்தைச் சிந்தி அதை வாங்கினார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால், சபை இயங்குவதற்கு தேவையான விலையை அவர் கொடுத்திருக்கிறார். அதன் பின்பு கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படுகிறோம். யோவான் எழுதும் போது, அவர் ஒளியிலிருக்கிறது. போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப் போம், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும் (I யோவா 1:7) என்கிறார். இறுதியாக கர்த்தருடைய ஜனங்களாகிய நாம் வாரத்தின் முதல் நாளில் ஒன்று கூடி, அவருடைய சரீரத்திற்கும், இரத்தத்திற்கும் ஞாபகமாக, கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுகிறோம் (அப் 20:7) பவுல், கொரிந்து சபை கிறிஸ்தவர்களுக்கு எழுதும் போது, சரீரத்திற்கு மாதிரியாக வைக்கப் பட்டிருக்கும் அப்பத்தில் பங்கு பெற்றவுடன், "போஜனம் பண்ணின பின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து, இந்தப் பாத்திரம் என்

இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது. நீங்கள் இதைப் பானம் பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். (கொரி 11:23-29)

கிறிஸ்துவின் இரத்தத்தைப் பற்றி இன்னும் அதிகமாக சொல்லலாம், ஏன் அது சிந்தப்பட்டது? அதற்குள்ளிருக்கும் வல்லமை, போன்றவை களைப் பற்றிப் பேசலாம், ஆனால் நாம் படித்ததை மீண்டும் சுருங்கப் பார்ப்போம்.

1. சிலுவையில், தன் இரத்தத்தை சிந்தி மரித்த கிறிஸ்து பூரண பலியாக இருக்கிறார்.

2. கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்பட்டதின் மூலம், பழைய பிரமாணம் நீக்கப்பட்டு, புதிய பிரமாணம் அவரின் இரத்தத்தினால் முத்திரை யிடப்பட்டது.

3. கிறிஸ்துவின் இரத்தத்தால் நாம் இரட்சிக்கப்படுகிறோம். கீழ்ப்படிதலின் மூலமாக அந்த இரத்தத்தை தொடர்பு கொள்கிறோம். வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமானால், ஒரு மனிதன் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டுமென்று கிறிஸ்து சொல்லுகையில், முதலாவது கிறிஸ்துவை அவன் விசுவாசிக்க வேண்டும், தன் பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும், அவரை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிடவேண்டும். இறுதியாக பாவ மன்னிப்புக்கென்று அல்லது இரட்சிக்கப்பட ஞானஸ்நானம் எடுக்கவேண்டும்(தண்ணீரில் மூழ்கி)(மாற்16:16, அப் 2:38) ஒருவன், கர்த்தருக்குக் கீழ்ப்படிவதின் மூலமாக, கிறிஸ்துவின் இரத்தத்தை ஞானஸ்நானத்தில் தண்ணீரில் சந்திக்கும்போது, அவருடைய மரணத்தினால் உண்டாகும் நன்மையை அடைகிறான். அதாவது கிறிஸ்துவின் இரத்தம் பாவத்தை சுத்திகரிப்பது தான் அந்நன்மை. இதை நாம் ரோமர் 6-ம் அதிகாரத்தில் வாசிக்கலாம். பவுல், விசுவாசித்தபோது, தன் பாவத்தைப் பற்றி மனந்திரும்பிய போது, கர்த்தரை அறிந்து கொண்ட போது, எழுந்து பாவங்கள் போகக் கழுவப்படு என்று அவனுக்கு சொல்லப் பட்டது, நாம் அதை வாசிக்கையில், “இப்பொழுது, நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான்” (அப் 22:16) கிறிஸ்து சொல்லுகையில் மனிதன் பாவமன்னிப்பை பெறும்படியாகவே அவருடைய இரத்தம் சிந்தப்பட்டதாக சொன்னார் (மத் 26:28; எபே 1:7) அப் 2:38ல், பேதுரு இயேசுவை விசுவாசித்த திரளான ஜனங்களைப் பார்த்து, நீங்கள் மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே, பாவமன்னிப்புக்கென்று, ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் என்றார். அவர்கள் அப்படியே செய்தார்கள், கர்த்தர் அவர்களை இரட்சித்து,

சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் (அப் 2:47) ஆகவே ஒருவன் இரட்சிக்கப்பட விரும்பினால், அவன் முதலாவது தேவனைப் பற்றிய காரியங்களையும், கிறிஸ்துவுக் கடுத்தவைகளையும் கேள்விப்பட வேண்டும், கிறிஸ்துவை அறிக்கையிட வேண்டும். ஞானஸ்நானம் பெறவேண்டும், அப்படி செய்வதினால் கிறிஸ்துவின் இரத்தத்தோடு அவன் தொடர்பு வைக்கிறான், அவனுடைய பாவங்கள் அவனுக்கு மன்னிக்கப்படுகிறது.

4. கர்த்தருடைய சபை கிறிஸ்துவின் இரத்தத்தால் வாங்கப்பட்டது, ஆகவே அது இரத்தக் கிரயம் உள்ளது, மிகவும் முக்கியமானது, நாம் கர்த்தருடையவர்களாய் இருக்க அதில் அங்கம் வகிக்க வேண்டும்.

5. ஒரு கிறிஸ்தவன் தொடர்ந்து ஒளியில், அதாவது தேவ சித்தப்படி அல்லது அவருக்கு உண்மையாய் நடந்தால் அவனை, கிறிஸ்துவின் இரத்தம் தொடர்ந்து சுத்திகரிக்கிறது.

6. கர்த்தருடைய ஜனமாயிருக்கிற நாம், வாரத்தின் முதல் நாள் தோறும் அவருடைய பந்தியில் பங்கு பெற வேண்டும், அவருடைய சரீரத்திற்கு மாதிரியாய் வைக்கப்பட்டுள்ள அப்பத்திலும், அவருடைய இரத்தத்திற்கு மாதிரியாக வைக்கப்பட்டிருக்கும் திராட்சை ரசத்திலும் பங்கு பெற வேண்டும். நாம் இரட்சிக்கப்பட, கிறிஸ்து பலியானதை நினைவுபடுத்துகிறதற்கு இது உதவியாக இருக்கும்.

என் நண்பர்களே! கிறிஸ்து உங்களுக்காக மரித்தார். நாம் பாவமன்னிப்பைப் பெற அவர்தான் இரத்தத்தை சிந்தினார். அவரை நீங்கள் விசுவாசிக்கிறீகளா? அவருக்கு கீழ்ப்படிந்திருக்கிறீர்களா? நீங்கள் இன்னும் கீழ்ப்படியவில்லை என்றால், அவர் நமக்கு தந்த இரட்சிப்பின் திட்டத்திற்கு கீழ்ப்படிவோம்.

**- J.C. CHOATE** **- J.C. சோட்**

**நியாயத் தீர்ப்பு நாளுக்கு ஆயத்தமா?**

மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தே நீதியாய்நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பபினதினாலே அதின் நிச்சயத்தை எல்லோருக்கும் விளங்கப் பண்ணினான் என்றார். - அப்போஸ்தலர் : 17;31.

# வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை ?

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பிள்ளைகள் தேவனுடைய வார்த்தையைப் பற்றி கற்றுக்கொள்வது மிக மிக அவசியமான ஒன்று. சில குடும்பங்களில் பார்த்தால் பிள்ளைகள் குறிப்பாக வாலிபர்கள் சுத்தமாகவே தேவனற்ற குடும்பச் சூழலில் வளர்க்கப்படுகிறார்கள். அவர்களுடைய பெற்றோர்கள் ஒழுங்காக சபைக்குச் செல்லாதவர்களாக இருக்கிறார்கள். தன்னுடைய தந்தை வேதத்தைப் படிப்பதையோ, தாய் தங்களுக்கு வேதாகமக் கதைகளை கற்றுக் கொடுத்ததையோ அவர்கள் ஒருபோதும் கேட்டதேயில்லை. இப்படிப்பட்ட இளைஞர்கள் ஏனோக்கைப் போன்ற தகப்பனைப் பெறவில்லை. ஏனோக்கு தன் வாழ்வில் தேவனோடு சஞ்சரித்தான் (ஆதி : 5:21-24) என்று பார்க்கிறோம். துரதிஷ்டவசமாக இவர்கள் ஆபிரகாமைப் போன்ற தகப்பனைப் பெறவில்லை. ஆபிரகாம் தன் பிள்ளைகளுக்கு தேவனின் வழியை காத்து நடக்கும்படியாகக் கட்டளையிட்டான் (ஆதி 18:19) தேவனைப் பின்பற்றும்படியாக உறுதியாக நின்ற யோசுவாவைப் போன்ற குடும்பத்தலைவனை (யோசுவா 24:15) இவர்கள் பெறவில்லை. நீதியைச் செய்யத் தூண்டின யோசபாத், அன்னாள், எலிசபெத், மரியாள், லோவிசாள், ஐனிக்கேயாள் போன்ற தாய்மார்கள் இன்று இல்லை.

அநேக வாலிபர்கள் இன்று தேவனை நினைக்காததற்கு காரணம் தேவனை நேசிப்பதைவிட மாமிசத்தை, உலகத்தை மிக விரும்பிச் செல்கின்றனர். உண்மைக் கிறிஸ்தவனாக மாறிவிட்டால் ஒருவேளை ஜனங்களிடம் நன்மதிப்பை இழந்து விடுவோமோ என்ற ஐயம் ஒருபுறம், சாத்தானுக்கு சேவை செய்ய அநேக வாலிபர்கள் தங்களை விற்றுக் கொண்டிருக்கிறார்கள். உலகத்துக்கு சிநேகிதனாயிருக்கிறவன் தேவனுக்குப் பகைவனாயிருக்கிறான் (யாக்கோபு 4:4) தீய செயல்களைச் செய்யும்படி தன் மக்களைத் தூண்டும் தகப்பன்மார்கள் இன்றும் உண்டு. இன்றைய நாகரிகம் என்னும் போர்வையிலே எத்தனை தாய்மார்கள் தன் பெண் பிள்ளைகளை குடிக்க வைத்து, நடனமாடச் செய்து, ஆண்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் அநாகரீகமான உடைகளை உடுக்க

வைத்துக் கொண்டிருக்கின்றனர். பவுல் இதைப்பற்றிக் கூறும்போது மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான் என்று கலாத்தியர் 6:7-8-ல் மிகப் பளிச்சென்று விளக்கிவிட்டார். பழைய ஏற்பாட்டிலே வாலிபனான யோசேப்புக்கு சோதனை வந்தபோது அவன் என்ன செய்தான்? (ஆதியாகமம் 39) நல்மனச்சாட்சியுள்ளவனாக **"இல்லை"** என்று திட்டமும், தெளிவுமாக கூறிவிட்டான், அந்த இல்லை என்ற சப்தம் அநேக நூற்றாண்டுகளாக தொனித்துக் கொண்டேயுள்ளது. ஒருவேளை அந்த சூழ்நிலைக்கு அவன் **ஆம்"** என்று சொல்லியிருப்பானானால் மகா புத்திசாலியான யோசேப்பை நாம் என்றோ மறந்திருப்போம்.

அநேக வாலிபர்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு அவருக்காக வாழ்வதற்கு இது சரியான நேரம் அல்ல, இன்னும் கொஞ்சம் வயதாகட்டும், தேவனுக்கேற்கும் வயது முதுமைதான் என்று தப்புக்கணக்குப் போட்டுக் கொண்டுள்ளனர். நாளையத் தினத்தைக்குறித்துப் பெருமை பாராட்டாதே ; ஒரு நாள் பிறப்பிப்பதை அறியாயே" (நீதி 27:1) என்னும் எச்சரிப்பை இன்று வாலிபரும், ஏன் பெரியவர்களும் கூட மறந்துவிடுகின்றனர்.

இளம் உள்ளங்களை சாத்தான் "வேண்டாம், பொறுத்திரு" என்கிறான். பிதாவாகிய தேவன் "இன்றைக்கே இரட்சண்ய நாள்" என்கிறார். யாருக்கு செவிகொடுக்கப் போகிறாய்? உன்னுடைய பதில் உன் நித்தியத்தை நிச்சயிக்கும்.

## எவ்வாறு வாலிபத்திலே தேவனை நினைக்க முடியும்?

1. இளமையிலே வேதத்தைப் படிப்பதின் மூலம், அவன் முதுமை அடையும் போதும் அவனுக்கு அது ஞானமாக விளங்கும். திமோத்தேயுவை நினைத்துப் பாருங்கள். சிறுவயது முதல் வேத எழுத்துக்களை அறிந்தவன் **(II தீமோத்தேயு 3:15) ல் பார்க்கிறோம்.**

**2. நன்மை, தீமை அறியத்தக்க வயது வந்தவுடன் கிறிஸ்துவுக்கு தங்களை கீழ்ப்படுத்துவதின் மூலம் வாலிபப்பிராயத்திலே தேவனை நினைத்து வாழ முடியும்.**

**3. நல்ல முன்மாதிரியான ஜீவியத்தின் மூலம் வாலிபத்திலே ஒருவன் தேவனுக்குப் பிரியமாய் இருக்க முடியும். தீமோத்தேயுவைப் பற்றிக் கூறும்போது அவன் லீஸ்திராவிலும் இக்கோனியாவிலுமுள்ள சகோதரராலே நற்சாட்சி பெற்றவனாயிருந்தான்"** (அப் 16:2) நாம் யார் என்று சொல்லுகிறது

எவ்வளவு முக்கியமோ அதைவிட நம்மை யார் என்று பிறர் சொல்வதுதான் மிக முக்கியம். உன்னுடைய ஜீவியத்தில் நம்பிக்கையில்லாத பட்சத்தில் நீ செய்கிற பிரசங்கமும், உன்னால் வரக்கூடிய எந்த பலனும் வீண் என்றுதான் மக்கள் கருதுவர்.

4. உண்மையான ஆராதனையின் மூலம் வாலிபர்கள் தேவனை நினைக்க முடியும். தேவனைத் தேட வேண்டும் என்ற எண்ணம் சிறிதளவு இருந்தால் கூட அவன் தினமும் வேதம் வாசிப்பதற்கும், ஜெபிப்பதற்கும் கொஞ்ச நேரத்தை ஒதுக்குவான். சங்கீதக்காரன் கூறும்போது "நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்" (சங் 119:11) என்கிறான். வாலிபர்கள் தங்கள் விசுவாசத்தை வெளியே காட்ட சிறந்த வழி ஆராதனையில் பங்கு பெறுவது தான். அநேக இளம் வாலிபர்கள் தவறாமல் ஆராதனையில் பங்கு பெற்றதன் காரணமாக தங்கள் பெற்றோரை கிறிஸ்துவுக்குள் அழைத்து வந்திருக்கிறதை கேள்விப்பட்டிருக்கிறோம்.

5. மற்றவர்களின் மனமாற்றத்திற்காக பாடுபட்டு வேலை செய்வதின் மூலம் வாலிபர்கள் தங்கள் வாலிபத்திலே தேவனை நினைக்க முடியும். ஆம். மற்றவர்களுக்குப் பிரசிங்கிக்க போகுமுன் நீ சத்தியத்தை சத்தியத்தின்படி அறிந்திருக்கிறாயா என்று சோதித்துப் பார்ப்பது மிக அவசியம். **வேத வசனங்களைப் பற்றிய அறிவு, ஒவ்வொரு நாளும் உன் தலைவர் இயேசுவுடன் கூட உள்ள உன் உறவு. விழுந்து போன ஆத்துமாக்கள் பேரில் உள்ள கரிசனை** ஆகிய மூன்றும் உள்ள வாலிபன் இயேசு கிறிஸ்துவுக்காக ஒரு வெற்றியுள்ள வீரனாக திகழ முடியும்.

தன்னைத்தானே இரட்சித்துக்கொண்டு, பிறரையும் இரட்சித்துக்கொள்ளும் இந்த இரண்டு பண்புகளும் சிருஷ்டிகரை தன் வாலிபத்திலே நினைக்க உதவும் மாபெரும் சாதனங்கள் ஆகும்.

வாலிபத்திலே சிருஷ்டிகரை நினைப்பதின் மூலம் உன் வாழ்க்கை இன்பமாக மாறும். இன்றைக்கு வாலிப மக்கள் ஆபாசமான காரியங்களிலும், மதுபானங்களிலும், போதைப் பொருட்களிலுமே சந்தோஷத்தைத் தேடி அலைகின்றனர். ஆனால் பிரசிங்கி 12:1 ல் கூறியபடி வாழ்கிறவனுக்கே மெய்யான சமாதானம் கிடைக்கிறது. இளமையில் தேவனைத் தேடினவர்கள் தங்களின் கடைசி நாட்களிலும் மகிழ்ச்சியான நாட்களைக் காணக்கூடும்.

வாலிபப் பிராயத்திலே தேவனுக்கு கீழ்ப்படிவதின் மூலம் உன் குடும்பம் மகிழ்ச்சியாக மாறும்.

இதை வாசிக்கும் அருமை வாலிப உள்ளங்களே ! தினமும் வேதம் வாசித்து, ஜெபிப்பதை பழக்கமாக மாற்றிக் கொள்ளுங்கள். சபையில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் தவறாமல் கலந்து கொள்ளுங்கள். நீ சார்ந்திருக்கும் உண்மையான சபையின் மீது பெருமிதம் கொள்ளுங்கள். ஆத்தும ஆதாய வீரர்களாக மாறுங்கள். ஒருவேளை உன் வீட்டினர் இன்னும் கிறிஸ்துவை அறியாதவர்களாக இருக்கலாம். அந்திரேயாவாக இருந்து, அவர்களை இயேசு வண்டை அழைத்து வாருங்கள் (யோவான் 1:40-42) தூய்மையான வாழ்க்கைக்கு யோசேப்பைப் பாருங்கள் (ஆதி : 39) தைரியமாய் இருக்க இளைஞன் தாவீதிடம் செல்லுங்கள் (1 சாமு:17) இளமைத் துடிப்பும், ஒப்புக்கொடுத்த ஜீவியத்திற்கும் யோசியாவைப் பாருங்கள் (II நாளாகமம் 34) எந்தச் சூழலிலும் தன் நம்பிக்கையை தேவன் மேல் வைத்த வாலிபர்களில் தானியேலை போல் வேறொருவர் இல்லை (தானி 1:8) தன் நல்ல நடத்தையின் மூலம் பிறருக்கு சாட்சியாக இருந்ததற்கு தலைசிறந்த எடுத்துக்காட்டு தீமோத்தேயு. எல்லாவற்றைக் காட்டிலும் மாபெரும் உண்மையான நன்மாதிரி நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே. வேதாகமம் அநேக முன் மாதிரிகளை உங்கள் முன்வைத்துள்ளது அதன் அடிச்சுவடுகளைப் பின்பற்றி வாழுங்கள். (1 பேதுரு 2:21).

வாலிபத்திலே இயேசு கிறிஸ்துவையும் வசனங்களையும் சமுதாயத்திற்கு உயர்த்திக் காட்டுங்கள். அப்போது பிதாவாகிய தேவன் உங்களை உயர்த்திக் காட்டுவார்.

**- ரேச்சல் இராஜநாயகம்.**

## ஆராதனையின் பங்குகள்

1. பாடல் - எபே. 5:16
2. ஜெபம் - லூக் 18:1
3. பிரசங்கம் - அப். 2:42
4. கர்த்தரின் பந்தி - அப். 20:7
5. காணிக்கை - I கொரி 16:1,2

# அப்படியானால் ....... எப்படி ?

அணிகள் இரண்டு மோதிக்கொண்டிருக்கும், அதிலொன்று வெற்றியின் விளிம்பைத் தொட்டுவிட்டது என்று அதைச் சார்ந்த அனைவரும் புளகாங்கிதமடையும் வேளையில், திடீரென்று எதிர் அணி வெற்றி பெற்றால், ஜெயக்கனியை இவ்வணி அல்லவோ எட்டிப்பறிக்கு மென்று நினைத்தோம், நிலைமையும் அப்படித்தானே இருந்தது. அப்படியானால் எப்படி கண்ணிமைக்கும் நேரத்தில் அல்லது சற்றும் எதிர்பாராத விதத்தில் எதிரணி வெற்றி வாகை சூடியதென்று புருவத்தை வில்லென வளைத்து வியப்பவர் உண்டு, அதிர்ச்சியால் மனம் உறைபவரும் உண்டு. நன்றாய் படித்தான், காலாண்டு, அரையாண்டு தேர்வுகளிலெல்லாம் இவனே முதல் மாணவனாய் திகழ்ந்தான் ஆனால் ஏனோ! இறுதித் தேர்வில் கோட்டை விட்டுவிட்டானென்று ஆசிரியர், மாணவனைப் பார்த்து நீ எப்பொழுதும் அதிக மதிப்பெண் பெறுவாய் அல்லவா அப்படியானால் ஏன் இப்படி குறைவான மதிப்பெண் பெற்றாய்? என சூரியோதயம் மேற்கே நடைபெற்றது போல் தன் அதிர்ச்சி கலந்த ஆச்சரியத்தை வெளிப்படுத்துவார்.

எபிரெய முதல் எழுத்தை எட்டெட்டு வசனங்களுக்கு முதல் எழுத்தாய் வைத்துப் பாடிய சங்கீதக்காரன், ஐந்தாவது எழுத்தை அப்படி வைத்துப்பாடுகையில் **"எனக்கு உணர்வைத் தாரும்"** அப்பொழுது நான் உமது வேதத்தைப் பற்றிக் கொண்டு என் முழு இருதயத்தோடும் அதைக் கைக்கொள்ளுவேன்." (சங் 119:34) என்கிறார். பக்திக்கு தேவையானவைகளுள் முதன்மை இடத்தைப் பெறுவது உணர்வுள்ள இருதயம், தேவன் புறம்பே தள்ளாத இருதயம், நொறுங்குண்ட இருதயம் ஆனால், எப்பொழுது இருதயத்திலே உணர்வில்லையோ அப்பொழுதே அவ்விருதயத்திற்குள் காரிருள் குடி கொள்ளும். அது நம் ஆவிக்குரிய சீரக் குடியைக் கொல்லும் (ரோமர் 1:21) என்பது திண்ணமாகையால், இயேசு இப்புவியில் இருக்கையில் தன் சீஷரோடு சம்பாஷனை செய்த ஒரு நிகழ்வை இம்மாதம் உங்கள் முன் வைக்கிறேன். உரையாடலைக் கேட்ட பின் உணர்வடைவோமென்ற நல்லெண்ணத்தில்.

## சிந்தியாமலும் உணராமலும் .....

இயேசுவின் இவ்வுலக வாழ்க்கையை எடுத்துக்கூறும் விதமாக நான்கு நூல்கள் விவிலியத்தில் இடம் பெற்றிருக்கிறது. மத்தேயு, மேசியாவை எதிர்பார்த்த யூதர்களுக்கு, இவரே மேசியாவென நிருபிக்கும்படி தன் நூலை வடிக்கிறார். மாற்கு, முடிவுகளையே நோக்கும் குணமுடைய ரோமர்களுக்கு இதோ சகலத்தையும் நன்றாய் செய்து முடிக்கிற வீரனென்று இயேசுவை சித்தரிக்கிறார். லூக்காவோ, இயேசுவை அடுத்த சந்ததியின் அறிவு தீபத்தை ஏற்றும் ஆசான்களுள் மிகச்சிறந்தவர் என்று கிரேக்கர்களுக்கு இயேசுவை மாபெரும் போதகராகவும், யோவானோ இயேசு மரியன்னையின் கர்ப்பத்தில் உருவானதிலிருந்து இருப்பவர் அல்ல, உலக தோற்றத்துக்கு முன்னமே இருப்பவர் அவர், அவரை அல்லாமல் எதுவும் சிருஷ்டிக்கப்படவில்லை என்று இயேசுவானவரின் தெய்வீகத்தை விளக்கி எழுதுகிறார்.

"எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தார்". என்று சரித்திரத்தின் நடுநாயகராம் இயேசுவானவரைப் பற்றி தனது ஏழாவது அத்தியாயத்தில் எழுதிய மாற்கு (7:37) தனது எட்டாம் அதிகாரத்தில், கணக்கில் எட்டா ஜனங்கள் இயேசுவினிடம் கூடி, மூன்று நாளாக அவர் தம் போதகம் கேட்டு, அந்த மூன்று நாளும் செவிக்கு உணவு கிடைத்ததால், அக்கூட்டத்தார் வயிற்றுக்கு உணவு பற்றி கவலை கொள்ளாத நிலையிலும், இயேசு அவர்களுக்காக பரிதபித்து, ஏழு அப்பமும் சில மீன்களையும் கொண்டு அந்த ஜனங்களுக்கு உணவளிக்கிறார். ஏறக்குறைய நான்காயிரம் பேர் சாப்பிட்டுத் தீர்ந்தார்கள். இது முடிந்து எல்லாம் சென்றபோது, நமது ஆண்டவரிடம் அடையாளம் கேட்டு சில பரிசேய கூட்டத்தார் வந்தார்கள், ஆண்டவரோ தனது ஆவியில் அங்கலாய்ப்படைந்து அடையாளம் ஒன்றும் உங்களுக்கில்லை என அவர்களின் கேள்விக்கு பதில் தருகிறார்.

சீஷர்கள் படவில் ஏறி அக்கரைக்கு போகும் வேளையில் உணவு எடுத்துச் செல்ல மறக்கின்றனர், அச்சமயம், நமது ஆண்டவர் பரிசேயருடைய புளித்தமாவைப்பற்றி எச்சரிக்கை செய்கிறார், சீஷர்களோ உணவை மறந்தது பற்றி பேசுகிறார் என தவறான எண்ணம் கொள்கிறார்கள், அப்பொழுது தான் நமது ஆண்டவர், ஏன் இப்படி சிந்தியாமலும், உணராமலும் இருக்கிறீர்கள் என்று கேள்வி கேட்கிறார். சரி நடந்ததை மறந்து போயிருப்பார்கள் என எண்ணி, ஐந்து அப்பங்களையும், ஏழு அப்பங்களையும் பற்றி அவர்களிடம் கேட்கிறார், அவர்கள் சரியான பதில் தான் தருகிறார்கள். அதை பார்த்த இயேசுவானர், அப்படியானால், நீங்கள் உணராதிருக்கிறது எப்படி? என்றார். வாலிபர்களே! இங்கு தான் நாம் ஒன்றை கவனிக்க வேண்டும், நமது வாழ்வில் ஆண்டவர் செய்யும்

ஒவ்வொரு செயலையும் நாம் முதலில் சிந்திக்க வேண்டும், நமது வாழ்வில் அற்புதங்களை இன்று தேவன் செய்வதில்லை என்றாலும், நாம் இருந்த இக்கட்டான சூழ்நிலையில் நம்மை நடத்திய தேவகரம், நம்மை தாங்கிய தேவ இரக்கம் இவைகளைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். அவர் நமக்கு துணையாய் இருந்து நம்மை போஷித்து காப்பாற்றிய வேலைகளை நாம் மறக்கக் கூடாது. அடுத்து, அது போன்ற சூழ்நிலை எழும் போது தேவன் நம்மோடு இருக்கிறார் என சிந்திக்க வேண்டும். அதை உணர வேண்டும், நாம் சீஷர்களைப் போல் எதையும் சிந்தியாமலும், உணராமலும் இருக்கக் கூடாது.

எனக்கன்பானவர்களே! இயேசு தனது சீஷர்களிடத்தில் இரண்டு கேள்விகளைக் கேட்கிறார். ஐந்து அப்பங்களை, எத்தனை கூடை மீதியாக எடுத்தீர்கள் என்ற போது, பன்னிரண்டு என்றும், ஏழு அப்பங்களை எத்தனை கூடை மீதியாக எடுத்தீர்கள் என்ற போது ஏழு என்றும் சரியாக பதில் தருகின்றார்கள். ஆக ! இதற்கு முன் என்ன நடந்தது என்ற அறிவு இருக்கிறது. ஆனால், அது மீண்டும் நமது ஆண்டவரால் நடத்தப்பட முடியும் என்ற விசுவாசம் இல்லை. வாலிபர்களே! பேதுரு அப்போஸ்தலன் சொல்வது போல் நாம் அறிவில் வளர வேண்டியது அவசியம் (II பேதுரு 3:18). ஓசியா சொல்வது போல் தேவனைப் பற்றிய அறிவு இல்லை என்றால் சங்காரம் தான் (4:6) என்பதெல்லாம் முக்கியமானாலும், அந்த அறிவு மாத்திரம் போதாது, நமது அறிவு நம்மை விசுவாசத்தில் வளர்க்க வேண்டும் அது இல்லை என்றால், நம்மையும் ஆண்டவர், ஏன் இப்படி உணராதிருக்கிறீர்கள் என்பார்.

எனக்கன்பானவர்களே! இன்னும் சிந்தியாமலும், உணராமலும் இருக்கிறீர்களா? என்று கேட்ட நமது ஆண்டவர், அடுத்ததாக இன்னும் உங்கள் இருதயம் கடினமாயிருக்கிறதா? என்றும் கேட்கிறார். இருதயக் கடினம் நமக்கு இருக்கக் கூடாது ! சங்கீதக்காரனைப் போல், நமக்கு நொறுங்குண்ட இருதயமும், நருங்குண்டதுமான இருதயமும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட இருதயத்தை தேவன் புறக்கணிக்கமாட்டார் (சங் 51:17) தேவன் நம் வாழ்வில் நம்மை நடத்திய ஒவ்வொரு நிகழ்வையும் நாம் நினைத்து அவரக்கு நன்றி சொல்லவேண்டும். தேவனுடைய வார்த்தை நம்மை நோக்கி வரும் போது, ஒன்று நாம் அதை கேட்டு மனந்திருந்த வேண்டும் அல்லது நமது மனதை கடினப்படுத்த வேண்டும், இது இரண்டில் ஏதாவது ஒன்று தான் நடக்கும், நாம் கடினப்படுத்தாமல், இலகின இருதயமுடையவர்களாகவே இருப்போம். தேவ ஆசீர்வாதம் **பெறுவோம்!.**

ஆமென் !

**- ஜே. பிக்கின்ஸ்**

## சிறுவர் பகுதி

# ஆற்றல் மிக்க இரட்டையர்

எனக்குப் பிரியமான சிறு பிள்ளைகளே, உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசுவின் அன்பான நாமத்தில் வாழ்த்துக்கள். மாதம் தோறும் உங்களுக்கு சில பயனுள்ள காரியங்களைக் கூற உதவும் தேவனை நான் ஸ்தோத்தரிக்கிறேன். சென்ற மாதம் போலவே இம்மாதமும் தேவனுக்காக பேசிய இரண்டு தீர்க்கதரிசிகளைப் பற்றி நாம் பார்க்கப் போகிறோம். யார் அவர்கள் என்று தெரிந்து கொள்ள தொடர்ந்து படியுங்கள்.

உங்கள் ஊழியர், ஞாயிறு தோறும் கொடுக்கும் செய்திகளில், தீர்க்கதரிசனத்தையோ அல்லது எதிர்காலத்தில் நடக்க போகிறதைப் பற்றியோ அவர் பேசமாட்டார். ஏனெனில், எல்லாவற்றிலும் போதுமானதாக உள்ள பூரணப்பிரமாணமாகிய வேதாகமத்தை ஏற்கனவே கொடுத்து விட்டார். ஆகவே, இனி ஒரு போதும் தேவன் ஒருவரிடமும் நேரடியாகவோ, வெளிப்படையாகவோ பேசப்போவதில்லை. வேதம் நமக்கு இப்போது இருப்பதினால் தீர்க்கதரிசனம் சொல்லுபவர்கள் இனி தேவையில்லை. ஆனால், உங்கள் ஊழியர் ஜனங்கள் இனி பாவத்திலிருந்து விடுபட வேண்டும் என்று கூறுவார். அதுதான் அவர் கொடுக்கும் செய்தியாக இருக்கும்.

அதைப் போலவே, பழைய ஏற்பாட்டில் இவ்வேலையை இரண்டு பேர் செய்து வந்தார்கள். ஜனங்கள் பாவத்திலிருக்கிறார்கள் என்று எச்சரிக்கும்படி அவர்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். அவர்கள் தான் "ஆகாய்"ம், "சகரியா"வும். அத்தோடு அவர்கள் அந்நாட்களில் சில தீர்க்கதரிசனங்களையும் சொல்லி வந்தார்கள்.

அந்தக் காலத்தில் தேவனுடைய ஆலயம் கட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுது இஸ்ரவேலர்கள் தங்கள் வேலைகளை தேவனுடைய பணிகளோடு கலந்து, ஆலயம் கட்டுவதற்கு அலட்சியம் செய்து வந்தார்கள். ஆகாய், ஜனங்கள், தங்களுக்காக சொகுசான வீடு கட்டுவதையும், யெகோவாவிற்கு ஒரு வீடு கட்டுவதற்கு முக்கியத்துவம் கொடுக்காமலிருப்பதையும் கண்டான்.

எனவே ஆகாய், அந்த ஜனங்களைக் கடுமையாய் கண்டித்தான். அவன் மேலும், இதற்கு முன்பிருந்த ஆலயத்தின் அழகைக் கண்ட

ஜனங்களுக்கு ஞாபகப்படுத்தினான். ஆகாயினுடைய வார்த்தைகளின் மூலம் ஆலயம் கட்டுபவர்களுக்கு விசுவாசமும், அவர்கள் வேலை செய்வதற்கு வேண்டிய ஊக்கமும் கிடைத்தது.

இப்போது சகரியாவைப் பற்றி பார்ப்போம். சகரியா, ஆகாயை காட்டிலும் இளையவனாக இருந்தான். கோபத்தோடு, பலமான எச்சரிப்பு செய்தியை ஜனங்களுக்கு கூறாமல், இன்னொரு ஆலயம் கட்டப்படப்போகிறது. அது கிறிஸ்துவால் கட்டப்படும் என்ற கூறினான். இதுதான் சகரியாவின் பிரசங்கமாயிருந்தது. அந்த ஆலயம் எது?.

I கொரி 3:16-ல் பார்க்கும் பொழுது அந்த ஆலயம் "சபை" என்று தெரியவருகிறது. மேலும் மத் 16:18-ல் தான் கட்டப்போகிற ஒன்றான மெய்ச் சபையை குறித்து இயேசு கிறிஸ்து பேசினார்.

ஆகாயும், சகரியாவும் தேவன் அவர்களுக்கு கொடுத்த வேலைகளை சிறப்பாகவும், வெற்றியுடனும் செய்து முடித்தார்கள். நாமும் அதைப் போலவே செய்திகளை கேட்டு, கேட்பவைகளை படித்து, சுறுசுறுப்புள்ள இளம் கிறிஸ்தவர்களாக நம்மை நாமே ஊக்கப்படுத்தி தேவனுடைய ராஜ்யத்தில் பல பணிகளை வெற்றியோடு செய்ய ஒப்புக்கொடுக்க வேண்டும்.





# யாக்கோபு ஒரு கண்ணோட்டம்

**ஆசிரியர் : இயேசுவானவரின் சகோதரனாகிய யாக்கோபு**

**காலம் : சுமார் கி.பி. 48**

## இந்நூல் பற்றி

1. இந்நூல் பொது அறிவின் நிருபம் என்றும், புதிய ஏற்பாட்டின் நீதிமொழிகள் என்றும் அழைக்கப்படுகிறது.
2. புதிய ஏற்பாட்டில் மூன்று முக்கிய யாக்கோபுகளைக் காணலாம்.
   (A) செபுதேயுவின் குமாரனாகிய யாக்கோபு, அப் 12:1,2 வசனங்களில் ஏரோதினால் இவன் கொல்லப்படுகிறான்.
   (B) அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு, இவனைப் பற்றி பெரிதாக ஒன்றும் தெரியவில்லை.
   (C) யோசேப்பு, மரியாளுக்குப் பிறந்த இயேசு கிறிஸ்துவின் சகோதரனாகிய யாக்கோபு இவர்தான் இந்நூலை எழுதியிருப்பார் என பொதுவாக நம்பப்படுகிறது.
3. இந்நூல் சிதறியிருந்த 12 கோத்திரங்களுக்கும் எழுதப்பட்டது.
4. இந்நூலின் ஆசிரியர் தன்னை இயேசு கிறிஸ்துவுக்கு அடிமை என்று அறிமுகப்படுத்துகிறார். சரீர உறவை விட ஆவிக்குரிய உறவு மேலானது என இதன் மூலம் தெரிந்து கொள்கிறோம்.
5. கிறிஸ்தவ நடைமுறை வாழ்க்கைக்கு இந்நூல் மிகவும் பிரயோஜனமாக இருக்கிறது.
6. இதன் செய்தி இயேசுவானவரின் மலைப் பிரசங்கத்தோடு ஒத்திருக்கிறது.

## இந்நூலின் செய்தி

1. விசுவாசமில்லாத நமது ஜெபங்களுக்கு பதில் கிடைக்காது. (யாக் 1:6)
2. நமது சுய இச்சை நம்மை பாவம் செய்யத் தூண்டுகிறது (1:13,6)
3. நமது நாவை அடக்கப் பழக வேண்டும். (1:26, 3:1-12)
4. விசுவாசம் கிரியைகளோடு இருக்க வேண்டும் (2:14 - 26)
5. நம்முடைய திட்டங்களில் தேவனுடைய சித்தம் நிறைவேற இடம் கொடுக்க வேண்டும். (4:13,6)

# விசுவாசத்தின் அடிப்படைகள்

**கடந்த மாதம்** வேதகாமத்தின் அதிகாரம் பற்றியும், அது தேவ ஆவியினால் அருளப்பட்டது பற்றியும் நமது படிப்பைத் தொடர்ந்தோம். இன்னும் குறிப்பாக, "வேதாகமத்தின் தன்னை பற்றி சொல்லும் சாட்சி" தவிர, தேவனுடைய வார்த்தை அவரால் அருளப்பட்டது என்பதை நாம் விசுவாசிப்பதற்கு வேறே காரணங்கள் இருக்கிறதா? என்ற கேள்வியை நாம் ஆராய்ந்துப் பார்த்தோம்.

வேதாகமம் தேவனால் ஏவப்பட்ட வார்த்தை தான் என்பதை நாம் விசுவாசிப்பதற்கு மூன்று காரணங்களை கவனித்தோம். முதலாவது காரணம் அதன் ஆச்சரியமூட்டும் ஒற்றுமை, இரண்டாவது தீர்க்கதரிசனங்கள் கொடுக்கப்பட்டதிலிருந்து நூற்றுக்கணக்கான வருடங்கள் கழித்து, சரியாகவும் முழுமையாகவும் நிறைவேறுவதாகும், மூன்றாவது அதனுடைய பட்சபாதமின்மை.

இம்மாதமும் வேதகாமம் தேவனுடைய ஆவியினால் அருளப்பட்டது என்பதற்கான பல்வேறு காரணங்களை கவனிப்போம்.

நான்காவது காரணம், அது யாராலும் அழிக்கப்படமுடியாது என்பது மத் 24:35-ல் நம்முடைய அருமை இரட்சகர் கூறும் பொழுது, "வானமும் பூமியும் ஒழிந்து போகும் என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை" என்றார்.

பல ஆண்டுகளாக வேதாகமத்தை அழிக்க எடுக்கப்பட்ட அநேக முயற்சிகளை கவனிக்கும் பொழுது மேற்சொல்லப்பட்ட வாக்கியம்' முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது.

உதாரணமாக எரேமியா 36:22-ல் யோயாக்கீம் என்கிற ராஜா தன் சூரிக்கத்தியினால் தேவனுடைய வார்த்தை எழுதப்பட்டிருந்த சுருளை வெட்டி அக்கினியிலேப் போட்டான். ஆனால் 30-32 வரை நாம் கவனித்தால் தேவன் ராஜாவின் மீது ஒரு சாபத்தை வருவித்தார். ஏற்கெனவே அந்த சுருளில் இருந்ததை விட எரேமியா இன்னும் கொஞ்சம் சேர்த்து வேறே ஒரு சுருளில் எழுதினார்.

வேதாகமத்தின் பயன்பாட்டை குறைத்து அதின் தாக்கத்தை அழிக்க முயற்சிகள் மேற்கொண்ட ரோமன் கத்தோலிக்க சபை நமக்கு இன்னும் ஓர் உதாரணமாகும். இப்படி சொல்வதினால் தயவு செய்து நாங்கள் கடுமையானவர்கள் என்றோ, வெறுப்பை காட்டுகிறவர்கள் என்றோ நீங்கள்

புரிந்து கொள்ளவேண்டாம். நாங்கள் வரலாற்று உண்மைகளை சொல்லி அன்போடு சத்தியத்தை பேச முற்படுவோம்.

1184ல், போப் லூசிகஸ் III, கத்தாலிக்க சபையிலிருந்து வால்டன்னாய் என்பவர்கள் விலக்கி வைத்தார், இந்த ஜனங்கள் தேவனை ஆராதிப்பது எப்படி என்பதை வேதாகமத்தை வைத்துதான் தீர்மானிக்க வேண்டும் என்று நம்பினார்கள்.

1229ல் பிரான்ஸில் உள்ள டலோசி என்கிற ஊரில் ரோமன் கத்தோலிக்க அதிகாரிகள், ஜனங்கள் வேதாகமத்தை வைத்திருப்பதை தடைசெய்தார்கள்.

மறுமலர்ச்சியின் காலத்தில் ஜான்ஹஸ் என்பவர் கிறிஸ்தவனுடைய முழு அதிகாரமும் சபையல்ல, வேதாகமமே என்று சொன்னார். அவரது வேதாகமத்தையும், புத்தகங்களையும் கத்தோலிக்க சபை எரித்துப்போட்டது. அது அவரை தடுத்து நிறுத்த முடியவில்லை அவரை உயிரோடே புதைத்தார்கள்.

இந்த தகவல் "ஹிஸ்டரி அண்ட் மிஸ்டரீஸ் ஆஃப் ரிலிஜியன் த்ரூ தி ஏஜெஸ்," ஜே. போர்டர் விலைட் ஸ்டார் பப்ளிகேஷன்ஸ். ஃபோர்ட் வர்த், டெக்ஸாஸ், யுஎஸ்ஏ," இதிலிருந்து எடுக்கப்பட்டது.

1550-ல் ரோமாபுரியிலிருந்த போப் ஜூலியஸ் III என்பவருடைய கார்டினல்களால் சொல்லப்பட்ட பின்வரும் அறிவுரையையும் கவனியுங்கள்.

"நேஷனல் பிப்ளியோதீக் இன் பாரீஸ், பிரான்ஸ்" வால்யூம் 22719 பக்கங்கள் 101-102ல் இது காணப்படுகிறது.

"உங்கள் பரிசுத்தத்திற்காக நாம் தரும் ஆலோசனையின் முக்கிய பகுதிகளை கடைசியிலே காணும்படி வைத்திருக்கிறோம். நாம் கவனிக்க வேண்டிய ஒவ்வொன்றையும் முழுபலத்தோடு, விழிகளை அகலமாக்கிக் கொண்டு ஆழமாய் நம்முடைய மனதை செலுத்த வேண்டும். சுவிசேஷத்தை வாசித்தல் எவ்வளவு குறைவாக அனுமதிக்கப்பட வேண்டுமோ அவ்வளவு குறைவாக அனுமதிக்கப்பட வேண்டும். (விசேஷமாக நவீன மொழிகளிலும், உங்கள் அதிகாரத்திற்குட்பட்ட நாடுகளிலும்) பொதுவாக கூட்டங்களில் எவ்வளவு குறைவாக வாசிக்கப்பட்டதோ அதுவே போதுமானது அதைவிட அதிகமாக வாசிக்கப்படுதல் தடைசெய்யப்பட வேண்டும். (ஜனங்கள் கொஞ்சத்தில் திருப்தியடையும் போது நம்முடைய நலன் செழிப்படைகிறது. அவர்கள் அதிக வாசிப்பை விரும்பும் போது நம்முடைய நலன் குறைய தொடங்குகிறது.

நமக்கு எதிராக தூண்டப்படும் விரோதிகளை காட்டிலும் இங்கே ஒரு புத்தகம் இருக்கிறது. அது நமக்கு இழப்புகளை கொண்டுவரும் அபாயகரமான புயலாயிருக்கிறது. உண்மையில் ஒருவன் தேவதாகமத்தின் போதனைகளை துல்லியமாக வாசித்து, நமது சபையின் செயல்பாடுகளோடு ஒப்பிட்டு பார்த்தால், அவன் அதன் முரண்பாடுகளை கண்டறிந்து நமது போதனை வேதாகமத்திலிருந்து வெகுதூரம் **தள்ளப்பட்டிருப்பதையும் அநேக சமயங்களில் அதிலிருந்து முற்றிலும் வேறுபட்டிருப்பதையும் கண்டுகொள்வான்.**

ஜனங்கள் இதனை உணர்ந்து கொண்டால் சகலமும் வெளியாக்கப்படும் வரை நம்மை ஓயாமல் தூண்டுவார்கள். அதன்பின்பு நாம் நகைப்புக்குள்ளாகி உலகத்தாரால் வெறுக்கப்படுவோம். சகல ஞானத்தோடும் எந்த பிரச்சனையும் இல்லாமல் ஜனங்களுடைய கரங்களிலிருந்து வேதாகமம் பிடுங்கி எடுக்கப்பட வேண்டியது அவசியமாயிருக்கிறது.

வேதாகமத்தை அழிக்க முற்பட்ட மூன்றாவது உதாரணம் 1694-1778ல் வாழ்ந்த வால்டேர் என்ற ப்ரெஞ்ச் தத்துவஞானி அவர் கூறினதாவது "இன்னும் 100 ஆண்டுகளில் ஒரு வேதாகமம் கூட இருக்காது."

200 ஆண்டுகள் கழித்து, அவருடைய படைப்புகள் பாரீஸில் ரூ 5க்கு விற்கப்பட்டது. ஆங்கிலேய அரசு புதிய ஏற்பாட்டின் கையெழுத்துப் பிரதிக்கு ரூ 21,000,000 க்கு சமமான விலை கொடுத்தது.

அதற்கும் மேலாக அவருடைய மரணத்திற்கு பின்பு அவருடைய அச்சகம் வேதாகமத்தை அச்சிடப் பயன்பட்டது, அவருடைய வீடு, ஜெனீவா வேதாகமச் சங்கத்தினரால் வேதாகமங்களை பத்திரப்படுத்தி வைக்க பயன்பட்டது.

நிச்சயமாகவே வேதாகமம் அழிக்கப்பட முடியாத ஒன்று என்று உறுதியாக முடிவு செய்யலாம். ஏனென்றால், அது தேவனிடத்திலிருந்து வந்தது, மனிதனிடத்திலிருந்து வந்ததல்ல.

வேதாகமம் தேவனால் ஏவப்பட்டதென்பதை விசுவாசிப்பதற்கு ஐந்தாவது காரணம் என்னவென்றால் அதில் கொடுக்கப்பட்ட உயரிய ஒழுக்க நெறிகள்.

நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீவதியுங்கள்; உங்களையும் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும்

ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார். உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால், உங்களுக்குப் பலன் என்ன? ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்கள் அல்லவா? உங்கள் சகோதரரை மாத்திரம் வாழ்த்துவீர்களானால், நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன? ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்கள் அல்லவோ? (மத்5:44-47)

அப்பொழுது இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி; ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன் (மத் 16:24)

நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்.

பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள் (கொலோ 3:1,2)

என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள் (யாக் 1:2,3)

இந்த வசனங்கள் மனிதனுடைய ஆலோசனையை போல் தெரிகிறதா அல்லது தேவனுடையதாய் தெரிகிறதா? இப்படிப்பட்ட ஆலோசனையை மனிதர்கள் கொடுப்பதில்லை என்று உங்களுக்கு தெரியும். அதற்கு மாறாக அவர்கள் பின்வருமாறு கூறுகின்றனர். "நல்லதென்று உணர்வீர்களானால் செய்யுங்கள்". "உங்களை நீங்களே பாதுகாத்துக்கொள்ளுங்கள், மற்றவர்களைக் குறித்து கவலைப்படாதிருங்கள்". வாழ்க்கையில் உங்களுடைய சரீரப்பிரகாரமான சகல சுகத்தையும் மகிழ்ச்சியையும் அனுபவியுங்கள். ஏனென்றால் நீங்கள் ஒருமுறை மட்டுமே வாழ்கிறீர்கள் என்பார்கள்.

வேதாகமம் தேவனுடைய வார்த்தையென்று விசுவாசிப்பதற்கான காரணங்களைத் தொகுத்துப் பார்ப்போம் முதலாவது, அதனுடைய அதிசயிக்கத்தக்க ஒற்றுமை இரண்டாவது மிக நேர்த்தியாக நிறைவேறின அற்புதமான தீர்க்கதரிசனங்கள் அதில் அடங்கியிருக்கிறது. மூன்றாவது,

அது முழுமையான பட்சபாதமற்ற பதிவேடு, நான்காவது, அது அழிக்கப்படமுடியாது. ஐந்தாவது, தேவனுடைய உயரிய ஒழுக்க நெறிகள் அதில் அடங்கியிருக்கிறது.

கர்த்தருக்கு சித்தமானால், அடுத்த மாதத்தில் நாம் பின்வரும் கேள்வியினைக் குறித்து ஆராய்வோம். "ஆவிக்குரிய வாழ்க்கையின் அதிகாரத்தரமாக தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்தை ஏற்றுக்கொள்வதற்கு மாற்றாக எவை இருக்கிறது?" அதுவரையில் தேவனிடத்தில் நாம் வைத்திருக்கும் அன்பிலும், விலையேற்றப்பட்ட புத்தகமாகிய வேதாகமத்தில் அவருடைய சித்தத்தை வெளிப்படுத்தினதுட்பட அவர் நம்மீது வைத்த அன்பிற்கு நாம் நன்றி செலுத்துவதிலும் வளருவோம்.

- J. பிக்கின்ஸ்

- CHARLIE DIPALMA.

## ஏழாவது வேனிற்கால வேதாகம முகாம்

வேலூர் மாவட்டம், ஏலகிரி மலையில் உள்ள YMCA வளாகத்தில் நடைபெற்ற எங்களது **ஏழாவது வேனிற்கால வேதாகம முகாமுக்கு** வருகைதந்து சிறப்பித்த விசுவாசிகள் ஒவ்வொருவருக்கும், தேவ செய்தியளித்து ஊக்கப்படுத்திய ஊழியர்கள் அனைவருக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இம்முகாமின் மூலம் 16 விலையேற்றப்பட்ட ஆத்துமாக்கள் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்தனர். இதன் விளைவாக 10 பிராந்திய சபைகள் பயனடைந்துள்ளது.

இந்த முகாம் தேவநாம மகிமைக்காய் நடைபெற ஊக்கமாய் ஜெபித்த, தாராளமாய்க் கொடுத்து உதவிய ஒவ்வொருவருக்கும் நன்றி கூறுகிறோம்.

-ஆசிரியர்.

# மகிழ்ச்சி

அன்பான வாசகர்களே! இக்கட்டுரையின் மூலம் உங்களை சந்திப்பதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். "**மகிழ்ச்சி**" இந்த வார்த்தையைக் கேட்ப்பதற்கும், படிப்பதற்கும் பரவசமாயிருக்கிறதே தவிர இந்த உலகில் வாழும் மனித இனத்திற்கு "**மகிழ்ச்சி**" பட்டாம் பூச்சி போல இருக்கிறது. அதைப்பிடிக்க முயற்சி செய்யும் பொழுது அது கைக்குச் சிக்காமல் பறந்து, பறந்து போகிறது. கண்ணுக்கு எட்டியும் கைக்கு எட்டாத ஏமாற்றமான நிலை. ஆனால் மனிதனை எப்போதும் தேற்றக்கூடிய தேவ வார்த்தை "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோசமாயிருங்கள்" (பிலி 4:4) என்றே சொல்லுகிறது. மனிதனால் முடியாத ஒன்றையும் வேதம் செய்யும்படி ஆலோசனை கொடுப்பதில்லை. மனிதன் மகிழ்ச்சியோடிருக்கமுடியும், அதுவும் எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருக்க முடியும் என்ற வேதவாக்கு நமது வேதனையைப் போக்கி நமக்கு நம்பிக்கையையும், உற்சாகத்தையும் ஊட்டுகிறதல்லவா? நமது தேவன் வாக்கு மாறாதவர், அவர் அப்படியே செய்வார். திருமறையில் "மகிழ்ச்சியின் மக்களாக" வாழ்ந்த அநேகரைக் காணமுடியும். அவர்களில், பிறந்தது முதல் 180 ஆண்டுகள் மகிழ்ச்சியாகவே வாழ்ந்து மரித்த ஒருவரை உங்கள் முன் முன்மாதிரியாய் வைப்பதில் முகமலர்ச்சியடைகிறேன். இவரது முன்மாதிரியை முனைப் புடன் பின்பற்றி மகிழ்ச்சியின் மைந்தர்களாய் வாழ வாழ்த்துகிறேன்.

நமது முற்பிதாக்களான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர் களில் அகத்திலும், முகத்திலும் முகமலர்ச்சியுடன் நமக்கு முன்பாகக் காட்சியளிப்பவர் ஈசாக்கு. ஈசாக்கு என்றால் "மகிழ்ச்சிக்குரியவர்" என்பது பொருளாகும். ஆம் ஈசாக்கு பெயருக்கேற்ப வாழ்ந்தவர். முற்பிதாக்களில் முதல்வராகிய ஆபிரகாம் தன் விசுவாசத்தை நிலைநாட்ட வாழ்நாள் முழுவதும் போராடினான். மூன்றாமவராகிய யாக்கோபின் ஆசீர்வாதமான வாழ்க்கையைக் குறித்து அவன் பிறக்கும் போதே தேவன் தெளிவாய் தெரிவித்திருந்தார். ஆனாலும் அவன் தன் மகிழ்ச்சியான , செழிப்பான வாழ்க்கைக்காக பிறரை ஏமாற்றினான். எத்தன், ஏமாற்றுக்காரன் என்ற தன் பெயருக்கேற்ப தன்னை நம்பினவர்களுடைய வாழ்க்கையில் ஏமாற்றத்தை விதைத்தான். "மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" (கலா 6:7) என்ற வேத வாக்குக்கேற்ப தன் வாழ்நாள் முழுவதும் ஏமாற்றங் களையே அறுவடை செய்தான். சந்தோசத்திற்கும் அவனுக்கும் சம்பந்தமே இல்லாமல் போய்விட்டது. ஆனால் நடுவராகிய ஈசாக்கின் வாழ்க்கையோ தெளிந்த நீரோடை போன்றது. தன் இறுதி நாட்களில் ஏசாவின் மனைவிகளால் ஏற்பட்ட மனநோவைத் தவிர்த்துப் பார்த்தால் (ஆதி 26:35) அப்படியென்றால் ஈசாக்கு தன் வாழ்க்கையில் போராட்டத்தை,

பிரச்சனைகளை சந்திக்கவேயில்லையா? அப்படியல்ல அவனும் ஒரு மகனுக்கு, ஒரு கணவனுக்கு, ஒரு தகப்பனுக்கு சமுதாயத்தில் ஒரு தனிமனிதனுக்கு ஏற்படும் போராட்டத்தை எல்லா நிலைகளிலும் சந்தித்தான். ஆனால் அவைகளின் மத்தியிலும் மகிழ்ச்சிக்குரியவனாக வாழ்ந்தான் என்பதே ஈசாக்கைக் குறித்து வேதம் கூறும் சாட்சியாகும். ஈசாக்கு தன் நிலத்தில் விதைத்தான் அதைக் கர்த்தர் ஆசீர்வதித்து நூறுமடங்கு பலன் கிடைக்கச் செய்தாரென்றால் ஈசாக்கின் மகிழ்ச்சிக்குக் குறைவிருக்குமா? தேவன் அவனை ஐசுவரியவனாக்கி வரவர விருத்தியடையச் செய்து மகாபெரியவனாக்கினால் (ஆதி 26:13) அவனுடைய மகிழ்ச்சி மங்கிப் போகுமா? நம் தேவன் மனுஷரிடத்தில் பட்சபாதமில்லாதவர் (கலா 2:6) தேவன் தமது பார்வைக்கு நல்லவனாயிருக் கிறவனுக்கு ஞானத்தையும் அறிவையும் இன்பத்தையும் அளிக்கிறவர் (பிர 2:26) ஆம் தேவன் ஈசாக்கை ஆசீர்வதிக்கக் காரணம் அவன் தேவனுடைய பார்வையில் நல்லவனாயிருந்திருக்கிறான். "கர்த்தர் எல்லா இருதயங் களையும் ஆராய்ந்து நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறவர்" (I நாளா 28:9).அன்பானவர்களே! நீங்களும் ஈசாக்கின் நற்கிரியைக் கவனித்து கற்றுக் கொண்டு கடைப்பிடித்தால் காலந்தோறும் களிப்புடன் வாழலாம்.

### நற்கிரியை – 1 :

### ஈசாக்கு தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிகிறவன்

"கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் சர்வாங்க தகனங்களும், பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்காது (1 சாமு 15:22) என்பதைத் தெளிவாய் புரிந்து கொண்ட ஈசாக்கு தன் கீழ்ப்படிதலான வாழ்க்கை மூலம் தேவனைப் பிரியப்படுத்தினான். தேவனும் "பிரியமானவனே! உன் ஆத்துமா வாழ்வது போல் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிரு (III யோ:2) என்று வாழ்த்தி சுகமாய் வாழச்செய்தார். ஏறக்குறைய வாலிப வயதை ஈசாக்கு நெருங்கும் நிலையில் தகப்பன் ஆபிரகாம் அவனைப் பலியிடும்படியாக, அவனைக் கட்டி பலி பீடத்தில் அடுக்கிய கட்டைகளின் மீது கிடத்தினான். பின்பு ஆபிரகாம் ஈசாக்கை வெட்டும்படிக்குத் தன் கையை நீட்டிக் கத்தியை எடுத்தான் (ஆதி 22:9.10) என்று வேதத்தில் பார்க்கிறோம்.ஆபிரகாமோ வயதானவர், ஈசாக்கு வாலிபன் தகனபலிக்குத் தேவையான கட்டைகளை சுமந்து கொண்டு மலைமேல் ஏறுவதற்குரிய பெலன் பெற்றவன். பலியிடும் காரியங்களைப் பற்றிய விபரம் அறிந்தவன். ஆனாலும் தன் தகப்பனுடையவிருப்பத்தை நிறைவேற்றுவதிலே எவ்வித எதிர்ப்பும் காட்டாமல் தன் உயிரையே தியாகம் செய்யும் அளவுக்குத் தன்கீழ்ப்படிதலைவெளிப்படுத்தினான். ஆம் தேவனுக்குக் கீழ்ப்படிதல் உயர்வையும், செழிப்பையும் தரும்.

தேவனுடைய வழி நடத்துதலுக்குத் தன்னை முற்றிலும் கீழ்ப்படுத்திய அடிமை யோசேப்பை தேவன் அதிபதியாய் உயர்த்தினார். தேவனுடைய வார்த்தைகளை உத்தமமாய் பின்பற்றிய யோசுவாவும், காலேபும், பாலும், தேனும் ஓடுகின்ற செழிப்பான கானான் தேசத்தை சுதந்தரித்துக் கொண்டனர். அவர் (இயேசு) சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகித் தம்மைத் தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி .......... எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். (பிலி 2:8,9,11)

பிரியமானவர்களே! வேத வாக்கியம் சொல்லுகிறபடி தேவனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும். (யோ 7:38) அது உன் வாழ்க்கையை செழிப்பாக்கும். ஒருவன் என்னில் (இயேசுவினிடத்தில்) அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தைக் கைக்கொள்வான் (யோ 14:23) அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக்கொள்வது எதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்வோம் (1யோ 3:22) அப்பொழுது **"மகிழ்ச்சி"** உங்கள் கையில்.

## நற்கிரியை-2
## ஈசாக்கு ஜெபிக்கிறவன்.

ஈசாக்கு ரெபெக்காளைத் திருமணம் செய்து 19 ஆண்டுகளாகியும் அவர்களுக்கு குழந்தை பிறக்கவில்லை. காத்திருந்த அவன் ஒரு காலகட்டத்தில் மலடியாயிருந்த தன் மனைவிக்காக கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்தான். கர்த்தர் அவன் வேண்டுதலைக் கேட்டருளினார். அவன் மனைவி ரெபெக்காள் கர்ப்பந்தரித்தாள் (ஆதி 25:21) ஒரே பிரசவத்தில் இரட்டைக்குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். ஈசாக்கு தன் கவலையை மாற்றி மகிழ்ச்சியளிக்கும்படி தேவனிடத்தில் தெரிவித்தான். நீதிமான்களின் ஜெபத்தைக் கேட்கிற தேவன் ஈசாக்கின் ஜெபத்தைக் கேட்டார் (நீதி 15:29) அவன் வேண்டிக் கொண்டது எதுவோ அதை அவராலே பெற்றுக் கொண்டான். ஜெபத்திற்கு பதில் அளிக்கிற தேவன் அவன் குறைவை நிறைவாக்கி கவலையைப் போக்கி மகிழ்ச்சிக்குரிய வாழ்க்கை வாழச் செய்தார்.

அன்பானவர்களே! நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லா வற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடு கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள் (பிலி 4:6) நம் தேவன் ஜெபத்திற்கு இறங்குகிறவர். உங்கள் குறைவுகளை நிறைவாக்குவார். அப்பொழுது **"மகிழ்ச்சி"** உங்களுடையதாகும்.

**(தொடரும்)**

**- K.M. PHILIP**

# நாம் நடந்து வந்த பாதைகள்

கிறிஸ்துவுக்குள் பிரியமான திருமறை ஆசான் வாசகர்களுக்கு கிருபை அளிக்கும் கிறிஸ்துவின் நாமத்தில் நல்வாழ்த்துக்கள்.

கிறிஸ்தவர்களாகிய நாம் ஆவிக்குறிய வாழ்வில் பலமுள்ளவர்கள், பூரணமானவர்கள் என்று வேதம் கூறுகிறது. இப்படி தேர்ச்சி பெற்று அனுபவமுள்ள உண்மைக் கிறிஸ்தவர்கள் பெலவீனமானவர்களை தாங்க வேண்டும், இது நம் மீது விழுந்த கடமையாகும். நான் மட்டும் பரிசுத்தமாய் இருந்தால் போதும் என் குடும்பம் மட்டும் பரிபூரணப்பட்டால் போதும் என்றென்னாமல் தனக்கடுத்த சகோதரனின் நிலைமையையும் அறிந்து தாங்கவேண்டும்.

"அன்றியும் பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல் பலவீனருடைய பலவீனங்களைத் தாங்கவேண்டும்.

நம்மில் ஒவ்வொருவனும் பிறனுடைய பக்திவிருத்திக் கேதுவான நன்மையுண்டாகும்படி அவனுக்குப்பிரியமாய் நடக்கக்கடவன்.

கிறிஸ்துவும் தமக்கேபிரியமாய் நடவாமல் உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தைகள் என்மேல் விழுந்தது என்று எழுதியிருக்கிறபடியே நடந்தார். " ரோமர், 15:1-3

பவுல் ரோமாபுரியில் உள்ள சபைக்கு எழுதும்போது பலவீனருடைய பலவீனங்களைத் தாங்கும்படியும், மற்றவர்களுக்கு பிரியமாய் நடக்கவும் வேண்டும் என்று கூறுவதுமன்றி நமது தலைவர் இயேசு கிறிஸ்துவும் தமக்கே பிரியமாய் நடக்காமல் மற்றவர்களுக்கே பிரியமாய் நடந்தார் என்று கூறுகிறார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த தாவீது தீர்க்கதரிசனமாகவே இதை கூறினார். "உம்முடைய வீட்டைக் குறித்து உண்டான பக்தி வைராக்கியம் என்னை பட்சித்தது, உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தனைகள் என்மேல் விழுந்தது" (சங். 69:9) கிறிஸ்துவும் இவ்வுலகத்தில் வந்தபோது ஊழியம் செய்யும்படிக்கே வந்தார். "............. அவர் நன்மை செய்கிறவராயும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார்." அப். 10:38 நன்மைகள் செய்து பாடநுபவித்தார். நம் வாழ்வின் பாதையை

சற்று திரும்பிப்பார்த்தால் எத்தனை பேருக்கு நன்மைகள் செய்திருக்கிறோம், எத்தனை பெலவீன சகோதரர்களுக்கு விசுவாச வார்த்தைகளைக்கூறி பெலப்படுத்தியிருக்கிறோம் சற்றே சிந்தித்துப்பாருங்கள். அப்படியே மனுசகுமாரரும் ஊழியங் கொள்ளும்படி வராமல், ஊழியம் செய்யவும் அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக்கொடுக்கவும் வந்தார். "மத்தேயு 20;28" நமது தலைவர் இயேசுகிறிஸ்துவுக்கு பூமியில் சர்வ அதிகாரமிருந்தும் தமது வாழ்வில் மற்றவர்களுக்காகவே வாழ்ந்து ஜீவனையும் கொடுத்தார். அவருடைய சகோதரர்களாகிய நாம் நம் வாழ்வின் பாதைகளில் எப்படி நடந்திருக்கிறோம் ?

பெலவீனரைத்தாங்குவோம், தளர்ந்து போனவர்களைத் திடப்படுத்துவோம். நம்முடைய வாழ்க்கைக்காக அல்ல பிறருக்காக நமது தலைவரைப்போல வாழ்ந்து காட்டுவோம்.

"ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து இப்படியே கிறிஸ்து வினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்" கலாத்தியர் 6:2

"ஆகையால் நமக்கு கிடைக்கும் சமயத்துக்குத் தக்கதாக யாவருக்கும் விசேசமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம்" கலாத்தியர் 6:10


என்ற நல்வார்த்தைக்கு செவி கொடுப்போம், செயல்படுவோம்.

"நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறதுமில்லை, ஒருவனும் தனக்கென்று மரிக்கிறதுமில்லை" ரோமர் 14:7

**L. மனாசே மண்ணு**

## நடப்புச் செய்திகள்

- ✡ பதினான்காவது மக்களவைக்கான தேர்தலைப்பற்றிய எல்லா கணிப்புகளும் வாக்காளர்களால் பொய்யாக்கப்பட்டிருக்கிறது.
- ✡ தமிழ்நாட்டிலுள்ள 39 தொகுதிகளையும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணி கைப்பற்றியது
- ✡ இந்தியா ஒளிர்கிறது என்ற பா.ஜா.க-வின் கோஷத்தை இந்திய மக்கள் நிராகரித்து விட்டனர்.
- ✡ இந்தியாவின் அடுத்த பிரதமர் காங்கிரஸ் தலைவர் சோனியா தான் என்பது கிட்டதட்ட உறுதியாக்கப்பட்டு விட்டது.
- ✡ ஈராக் சிறையில் உள்ள கைதிகள் நிர்வாணப்படுத்தி கொடுமைப் படுத்தப்பட்டசெய்தி, உலகை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.



## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELGU | Monday<br>to Friday | 5.30-5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45-7.00 p.m.<br>5.45-6.00 p.m.<br>5.30-5.45 p.m. | Box. 8405<br>Bangalore - 560<br>084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45-4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sansrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghese |

## PLEASE WATCH

ETC TV

Every Sunday from 6.00 to 6.30 a.m.

for a Christian Programme in Hindi

Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Litertures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2003
Licensed to Post without pre payment
TN / WR / ERD / 03 / WRP / 2003

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi
Annual Subscription Rs-30/-

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு**

**ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட**

---

**இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.**

## பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குனர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ. எண் - 27, காங்கேயம்.
தமிழ்நாடு. இந்தியா.




*Published by **CHURCH OF CHRIST**, Kangayam.*
*Printed at **Konar Printers**, Madurai - 625 012. Editor. S. Rajanayagam.*